கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2030 (வெகுதான்ய ஆண்டு) தைத் திங்கள்



மகிடனோடு போர் புரியும் அன்னை, மகிடாசுரமர்த்தனி குடைவரை, மாமல்லபுரம், பல்லவர் காலம், கி. பி. 7—8-ஆம் நூற்றாண்டு

காலாண்டிதழ் - 52 (1999, சனவரித் திங்கள்) விலை ரூ. 1-50
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே ....

குறிப்பு: 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் — ஜூலைத் திங்கள் காலாண்டிதழ்கள் 50-51-க்குப் பிறகு இடையில் ஆறு இதழ்கள் நிர்வாகக் காரணங்களால் வெளியிட இயலவில்லை ஆதலால் 1999 - சனவரித் திங்களில் காலாண்டிதழ் எண் 52 வெளியிடப் படுகிறது.

ஆழ்கடல் மரபுச் செல்வங்களையும் அழியாமல் காப்போம்

1

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

முத்துக் குளிப்பதற்கும், கடற்பஞ்சு சேகரிப்பதற்கும், மகிழ்ச்சியாகக் கடலில் மூழ்கிப் பொழுது போக்குவதற்கும், பண்டைப்பொருட்களைத் தேடி வெளிக்கொணர்ந்து அதன் பொருட்டு மிகுந்த பொருள் ஈட்டலாம் என்ற தீய ஆசையில் கடலில் மூழ்குவதற்கும் பழகிப் போனவர்கள், கடலால் கொள்ளப் பட்ட நகர்ப் பகுதிகளையும் மற்றும் தரை தட்டிய கப்பல் பகுதிகளையும் கண்டறிந்து தொலலியல் ஆய்வாளர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்பாகத் தாங்கள் கடலுக்கடியில் கண்டுபிடித்த கப்பல் அழிவுகளிலிருந்தும் நகரங்களிலிருந்தும் பல விலை மதிப்பற்ற சிற்பங்கள், கலைப் பொருட்கள், மதுக்கலங்கள், உலோகப் பொருட்கள் ஆகியவற்றைத் திருட்டுத்தனமாகக் கலைப்பொருட்களை வாங்கும் வணிகர்களிடம் விற்பனை செய்து பெரும் பொருள் ஈட்டி வந்தனர்.

கடந்த 20 ஆண்டுகளில் ஃபிரான்சில் மட்டும் கிரேக்க-ரோமானிய காலத்து 400 கப்பல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்றைத் தவிர மற்ற அனைத்தும் தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பதற்கு முன்னரே முத்துக்குளிப்போராலும், கலைப்பொருள் கொள்ளைக்காரர்களாலும் கொள்ளையடிக்கப் பட்டுவிட்டன.

சுமார் ஒரு நூற்றாண்டுக் காலமாகத்தான் கடலடி மரபுச் சின்னங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு வருகிறது. 1907-ஆம்

ஆண்டில் கடற்பாசியெடுப்பதற்காகக் கடலுள் சென்ற கிரேக்கர் சிலர் துனிசியக் கடற்கரையில் மாதியா என்னுமிடத்திற்கருகில் நீருக்குள் 40 மீட்டர் ஆழத்தில் மூழ்கியிருந்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கப்பலைக் கண்டனர். அக்கப்பல் கி.மு. 85-ஆம் ஆண்டில் சல்லாபுள் தலைமையில் சென்று ஏதென்ஸ் நகரைப் பிடித்த ரோமானியக் கப்பற்படையைச் சேர்ந்ததென்பது பின்பு தெரிய வந்தது. போரில் கைப்பற்றிய கோயில் தூண்கள், வெண்கலச் சிலைகள் முதலிய பொருட்களைச் சுமந்துகொண்டு ஏதென்சு நகரிலிருந்து திரும்பி வரும்போது பெரும் சூறாவளிக் காற்றில் சிக்கி நீரில் மூழ்கி விட்டது. தொல்லியல் ஆய்வாளர்கள் பலமுறை நீருள் மூழ்கி அக்கப்பலை ஆய்ந்து பல அரிய கலைச் செல்வங்களை மீட்டு வந்தனர். அக்கலைப் பொருட்கள் துனீஸ் நகரிலுள்ள பார்டோ அரும் பொருட்காட்சிச்சாலையில் ஆறு அறைகளில் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன. இன்னமும் ஏராளமான பொருட்கள் மீட்கப்படாமல் அக்கப்பலிலேயே உள்ளன.

தொடக்கக் காலத்தில் அஞ்சாநெஞ்சம் வாய்ந்த ஒரு சில தொல்லியல் ஆய்வாளர்கள் தலைக்கவசமணிந்து முத்துக்குளிக்கும் முறையையோ, அல்லது கடற்பஞ்சு முறையையோ பயன்படுத்தி ஆழ்கடலில் மூழ்கிக் கிடக்கும் அரிய தொல்பொருட்களையும், கப்பல் அழிவுகளையும் கண்டுபிடித்தனர். இரண்டாம் உலகப் போரின் இறுதி வரை மேற்காணும் முறைகளைப் பயன்படுத்தி சுமார் பன்னிரண்டு இடங்களில் கடலில் தொல்பொருட்களைக் கண்டறிந்தனர். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஜேக்-ஒய்லஸ் அஸ்டோ என்ற பிரெஞ்சுப் பொறியியல் வல்லுநர் ஆழ்கடலில் சுவாசிப்பதற்கு உயிர்ப்புக் குழாய்க்கலம் (Scuba) கண்டுபிடித்தார். இக்கருவியின் உதவியால் கடலில் 50 மீட்டர் ஆழம் வரை மூழ்கி ஆய்வுகளை நடத்த முடிந்தது. மேலும் புரோட்டான் காந்தப் புலக்கருவி (Proton Magneto Meter), ஒளி, ஒலி ஊடுருவிக்கருவி (Side Scan Sonar), ஓசைத் துடிப்புக் கருவி (Eco Sounder), உலோகம் அறியும் கருவி (Metal Detector) ஆகிய கருவிகளும் படிப்படியாகக் கடலகழாய்வில் பயன்படுத்தப்பட்டன. முதற் கருவியால் பூமியில் காந்தப் புலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிய இயலும். இரண்டாம் கருவியால் கடல்தளத்தில் புடைத்து நிற்கும் பொருள்களைப் பக்க ஆய்வு ஒலியால் கண்டறிய

முடியும். மூன்றாம் கருவியால் கடலின் அடித்தளத்துக்கு ஓசைத் துடிப்புகளை அனுப்பி மூழ்கியுள்ள பொருட்கள் மீது பட்டுத் திரும்பி வரும். நான்காம் கருவியால் கடல் தளத்தில் காணப்பெறும் உலோகப் பொருட்களை உணர இயலும்.

கடந்த 50 ஆண்டுகளில் ஆழ்கடலாய்வு காட்டுத்தீ போல் நாட்டுக்கு நாடு பரவத் தொடங்கி விட்டது. இன்றைய நிலையில் உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான தொல்லியல் சான்றுகளும், கப்பலழிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சில 45,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. வேறு சில இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தியவை. ராஸ்மோனியாவில் கற்காலத்துக் கற்சுரங்கங்களும், அமெரிக்க விடுதலைப் போரின் போது மூழ்கிய கப்பல்களும் கண்டறியப்பட்டுள்ளன.

1950 களில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான கப்பலழிவு ஜெலிடோனியாவில் கி.மு. 1200க்கு முந்தைய வெண் கலக் காலத்தில் நிகழ்ந்தது. அக்காலத்தில் கடலுக்கடியில் அறியப்பட்டுள்ள மிகத் தொன்மையான துறைமுகம் கி.மு. 600ஐச் சார்ந்தது. 1960களில் வெண்கலக் காலத்துத் (கி.மு. 1500) துறை முகங்கள் கிரீஸிலும், இஸ்ரேலிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாண்டிக் கடலிலும், கிரீஸ், துருக்கி, இஸ்ரேல், அமெரிக்கக் கடலோரங்களிலும் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட புதிய கற்காலத்தையும், 10000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இடைக் கற்காலத்தையும் சார்ந்த வாழ்விடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 1982-ல் தென் துருக்கிக் கடலோரமுள்ள காஸ் அருகே கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் பழைய கற்காலத்தைச் (10,000 முதல் 45,000 ஆண்டுகள் முடிய) சார்ந்த தொல்பொருட்கள் கடலிலிருந்து வெளிக் கொணரப்பட்டுள்ளன. நில அகழாய்வு மூலம் (Land Excavation) தெரிய வராத பல அரிய வரலாற்றுச் செய்திகள் கடலடி கண்டுபிடிப்புகளின் மூலம் தெரிய வந்துள்ளன. கடந்த 45,000 ஆண்டுகளில் நிகழ்ந்த மனித இனத்தின் நாகரிக வளர்ச்சி யையும் பண்பாட்டு மாற்றங்களையும் நாம் அறிந்து கொள்ள மேற்காணும் கண்டுபிடிப்புகள் பெரிதும் உதவியுள்ளன. உலக அளவில் நிகழ்ந்துள்ள சில முக்கியக் கண்டுபிடிப்புகளை அறிந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் தென் இத்தாலியக் கரிபியக் கடலில் ரியாஸ் அருகில் இரு வெண்கலச் சிலைகளை ரோமானிய நீர்மூழ்குநர் ஒருவர் கண்டுபிடித்தார். இரண்டு மீட்டர் நீளமும் 150 கிலோ எடையுமுள்ள இச்சிலைகள் ஏதென்ஸ் கலைப்பாணியின் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இச்சிலைகள் டெல்ஃபி ஆலயத்தை அலங்கரித்த பதினொரு சிலைகளுள் இரண்டாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இவை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கணிக்கப் பட்டுள்ளன.

கடற்பஞ்சு தேடி நீருள் மூழ்கிய ஓர் இளைஞர் 1982-ல் கரிப் கடற்பகுதியில் கடல்தளத்தில் தாம் கண்டறிந்த தொல் பொருட்கள் பற்றித் தொல்லியல் ஆய்வறிஞர்களிடம் தெரிவித்தார். அமெரிக்கத் தொல்பொருளாய்வாளர்கள் ஜார்ஜ் பாஸும், டெக்ஸாஸ் ஏ. எம். பல்கலைக்கழகத் தொல்பொருளாய்வு நிலையத்தைச் சார்ந்த அவருடைய குழுவினரும் அப்பகுதியை உடனே ஆய்வு செய்தனர். அப்பகுதி பண்டைய வெண்கலக் காலக் கப்பல் அழிபாட்டைக் காட்டியது அவ்வழிபாட்டில் கிடைத்த செப்புக் கட்டிகள், கி.மு. 1350 ஐச் சேர்ந்த தீப்ளிலுள்ள எகிப்தியக் கல்லறையில் உள்ள செப்புக் கட்டிகளைப் போன்றிருக்கின்றன. ஒரு பொத்தான் அளவுள்ள சிறு முத்திரையிலுள்ள குறிகள் பண்டைய கிரேக்க வணிகர்கள் பயன்படுத்திய குறிகள் போன்றவை. இச்சிறு முத்திரை மூலம் அக்கப்பல் எந்த நாட்டைச் சார்ந்தது என்பதை எளிதாக அறிய முடிந்தது. இக்கப்பலில் கானான், மைசீனி, சைப்ரஸ் பகுதிகளைச் சேர்ந்த பொன், மட்பாண்டக் கலங்கள், நீலவண்ணக் கண்ணாடிக் கட்டிகள் போன்றவை கிடைத்துள்ளன. இதுவரை கிடைத்துள்ள கண்ணாடிக் கட்டிகளுள் இவையே மிகத் தொன்மையானவை என்று கருதப்படுகின்றது.

சைப்ரஸில் கிரேனியா என்னும் துறைமுக நகரின் அருகில் 30 மீட்டர் ஆழத்தில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல் தரை தட்டியிருப்பதைக் கடற்பஞ்சுக்காக கடலில் மூழ்குவோர் கண்டுபிடித்தனர். அக் கப்பலைக் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கில் எல். காட்சேவ் தலைமையில் சென்ற குழுவினர் 1968-ல் அகழ்ந்தாய்ந்தனர். இருபது ஆண்டுகள் நடைபெற்ற இவ்வாய்வின்

இறுதியில் இக்கப்பல் பண்டையக் கிரேக்கக்கப்பலைப் போலுள்ளது என்று அறிந்துள்ளனர். இக்கப்பலில் 400 மட்பாண்டங்கள், பிற உலோகங்கள், 10,000 பாதாம் பருப்புகள் இருந்தன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியில் கி.மு. 7000 அளவிலேயே கடல். கடந்திட இயலாத பெருந்தடங்கலாக இருந்திடவில்லை என்பதைக் கிரீஸில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய காலக் குடியிருப்புகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கரும்பளிங்குப் பாறையும் மீன் எலும்புகளும் காட்டுகின்றன. கிறித்துவுக்கு முந்தைய கடைசி 200 ஆண்டுகளில் அல்லது கிறித்துவுக்குப் பிந்தைய 200 ஆண்டுகளில் ஒரு மலையின் உச்சியிலிருந்து ஒருவர் மத்திய தரைக்கடலைப் பார்க்குங்கால் நீலவானில் நட்சத்திர கூட்டங்களைக் காண்பது போல் நீலநிறக் கடலில் ஏராளமான பாய்மரக் கப்பல்கள் தவழ்ந்து செல்வதைக் கண்டிருப்பர் என்று பிரிஸ்டர் பல்கலைக்கழகத்தில் ரோமானியக் தொல்பொருளாய்வு விரிவுரையாளர் ஆண்டனி ஜே. பார்க்கர் என்பார் கூறியுள்ளார். இதன் விளைவாக மத்திய தரைக்கடல் ஒரு நீரடி அருங்காட்சியகம் என்று புகழ்ந்து பேசப்படுகிறது.

1969-ல் பஹாமாவில் வடபிமினி தீவிற்கு அப்பால் கண்டுபிடிக்கப்பட்ட 'சுவர்' அல்லது 'தளம்' போன்ற பெரும் கற்பாளங்கள் வல்லுநர்களைத் திகைக்க வைத்துள்ளன. இக்கற்களை மனிதன் அமைத்தான் என்று சிலரும், இவை பாறை அருகில் அமைந்த சுண்ணாம்பு அமைப்பு என்று வேறு சிலரும் கருதுகின்றனர். டிமிட்ரி ரெபிகாஃப் என்பவர் இதேபோன்ற ஒரு சுவரைக் கண்டுபிடித்து, கார்பன் 14 சோதனை மூலம் அதன்காலம் கி.மு. 5000 என்று கூறியுள்ளார். அச்சுவர் போன்றே பஹாமா சுவரும் காணப்பெறுவதால் இச்சுவரின் காலமும் அதே காலத்ததாக இருக்கலாம் என்று தற்போது வல்லுநர்கள் கருதுகின்றனர்.

1982-ல் கடற்பஞ்சு தேடிக் கடலுள் சென்ற துருக்கி மூழ்குநர் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் டெக்ஸாஸைச் சார்ந்த இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் நாட்டிகல் ஆர்க்கியாலஜியைச் சேர்ந்த குழுவினர் துருக்கிக் கடற்கரையில் உலுபுருன் என்னுமிடத்தில்

ஆய்வு செய்ததில் கி.மு. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கப்பலைக் கண்டறிந்தனர் அதிலிருந்து எகிப்திய டுடங்கமன் காலத்தையும், ட்ராய் வீழ்ச்சிக் காலத்தையும் சார்ந்த உருவச் சிலையையும், நான்கு கைப்பிடிகளுடன் கூடிய செம்புத் துண்டுகளையும், ஆயிரக் கணக்கான அரிய தொல்பொருட்களையும் கண்டறிந்தனர்.

ஆழ்கடலகழாய்வில் மேலும் சில நுட்பமான தொழில் முறைகள் கையாளத் தொடங்கப்பட்டுள்ளன. வான்வழி மற்றும் துணைக்கோள் வழி உருவரைக் காட்சி பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன. முன்னர் அறியப்படாதிருந்த கடற்பாறை அடுக்கு களையும், மணல திட்டுகளையும் துணைக்கோள் வழி உருவரைக் காட்சிகள் புலப்படுத்தியுள்ளன. சில நேரங்களில் உயரத்தி லிருந்து எடுக்கப்படும் ஒளிப்படங்களிலிருந்து கடலில் மூழ்கியுள்ள கப்பல்களைக் கண்டறிய முடிகிறது

உலகின் பல பகுதிகளிலிருந்தும் இவ்வாறு பல விலை மதிப் பற்ற தொல்பொருட்களும், கப்பலழிவுகளும் கண்டுபிடித்து வரு வதைக் கருத்தில் கொண்டு யுனெஸ்கோ பல முக்கிய நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது யுனெஸ்கோவின் புகழ்மிகு உலக மரபுச் சின்னங்களின் பட்டியலில் கடலில் காணப்பெறும் தொல்பொருள் ஆய்வுக்குரிய பல முக்கியப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. 1972-ல் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாடு நிறைவேற்றிய உலக மரபுச் செல்வ 'ஒப்பந்தப்படி, கடலுக்கு அடியில் உள்ள மரபுச் சின்னங்களும் தக்கப் பாதுகாப்பையும் பன்னாட்டுத் தொழில்நுட்பக் கூட்டுறவையும் பெறுகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆழ்கடலகழாய்வு முதன் முதலில் மேலைக் கடற்கரையான அரபிக் கடலில் குஜராத் மாநிலத்தையொட்டிய பெட் துவாரகைத் தீவுக் கடற்பகுதியில், தொடங்கப்பட்டது. இறைவன் கண்ணனால் அமைக்கப் பெற்ற தாகக் கூறப்பெறும் துவாரகை நகரத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சி 1983லிருந்து 1988- 89 வரை ஆண்டுதோறும் டாக்டர் எஸ். ஆர். இராவ் அவர்களது தலைமையில் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டது. இவ்வாய்வில் கிடைத்துள்ள பானையோடுகள், பஹ்ரெயின் கலைத்தாக்கத்தோடு கூடிய அரப்பன் கால முத்திரை, பெரிய கோட்டைச்சுவர் ஆகிய அனைத்துச் சான்றுகளையும்

கொண்டு பார்க்கையில் துவாரகையில் இற்றைக்கு 17, 000 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு துறைமுகப் பட்டினம் இருந்திருக்கிறது என்பது உறுதியாகியுள்ளது.

இவ்வாய்வினைக் கேள்வியுற்ற தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாட்டில் சங்க காலத்தில் கடலால் கொள்ளப்பட்டது என்று இலக்கியங்கள் கூறும் சோழர்களின் தலைநகரமாகவும் துறைமுகப் பட்டினமுமாகவும் விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் அகழாய்வு மூலம் கண்டறிய இயலுமா என்பது குறித்து ஆய்வு செய்யத் திட்டம் தீட்டியது. முதற்கட்டமாக 1981-ல் நில இயற்பியல் ஆய்வு காவிரிப்பூம்பட்டினக் கடற்பகுதியில் கரைக்காட்டுக்கும் சின்ன வானகிரிக்கும் இடைப்பட்ட பகுதியில் கடற்பகுதியிலிருந்து ஐந்து கிலோமீட்டர் உள்பகுதி வரை செய்யப் பெற்றது. அவ்வாய்வில் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் சில இடங்களில் சில உயரமான மேடுகள் இருப்பது கண்டறியப்பட்டன. அதனை அடிப்படையாகக் கொண்டு விரிந்த அளவில் ஆழ்கடலகழாய்வு மேற்கொள்வதற்காக இந்திய அளவில் முதன்முதலாக தமிழ்நாடு மாநில அரசு ரூ. 2 2 கோடி நிதியொதுக்கி பூம்புகாரில் 1991-ஆம் ஆண்டு முதல் இதுவரை நான்கு கட்டங்களில் ஆய்வு நடைபெற்றிருக்கிறது மேற்காணும் நான்கு கட்ட அகழாய்வு மூலம் பண்டையப் பூம்புகார் கடலுள் மூழ்கியது பற்றிய கீழ்க்காணும் சில முக்கியத் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

1 கடற்கரையிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் கடலினுள் 23 மீட்டர் ஆழத்தில் இலாட வடிவ கட்டடத்தின் அடிப்பகுதி வடக்குப் பக்கம் வாயில் உள்ள நிலையில் கண்டறியப்பட்டுள்ளது. கட்டடத்தின் மொத்த சுற்றளவு 135 மீட்டர்; சுவரின் அகலம் 4.50 மீட்டர் வரை; சுவரின் உயரம் சில இடங்களில் 1.30 மீட்டர்; வேறு சில இடங்களில் 3.00 மீட்டர். நுழைவாயிலின் இடைவெளி 25 மீட்டர். இக்கட்டடம் ஒரு கோயிலாகவோ அல்லது ஒரு கோட்டைக் கொத்தளமாகவோ இருக்கலாம் என்று கருதப்படுகிறது

2. இக்கட்டடத்துக்கு முன்பாக இருபக்கங்களிலும் இரு கட்டடப் பகுதிகள்

3. இக்கட்டடங்களுக்குத் தென்கிழக்கில் 50 மீட்டர் தொலைவில் மேலும் இரண்டு கட்டடப் பகுதிகள். இக்கட்டடங்கள் அனைத்தும் செம்புராங்கற்களால் கட்டப்பெற்றவை. இவை கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 3-ஆம் நூற்றாண்டுக் காலக் கட்டத்தைச் சார்ந்தவைகளாகலாம்.

4. பண்டைய காவிரியாற்றின் போக்கு.

5. கடற்கரையையொட்டிய பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் ஏழு அல்லது எட்டு மீட்டர் ஆழத்தில் விட்டுவிட்டு சில கட்டடப் பகுதிகள். இக்கட்டடங்கள் கருங்கற்களால் கட்டப் பெற்றவை.

6. கரையையொட்டிய அலைகள் மோதும் பகுதிகளில் சில செங்கற் கட்டடங்கள் அழிபாடுற்று மண் மேடான நிலையில் காணப்படுகின்றன. இவை கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை உள்ளதாக இருக்கலாம்.

7. சின்னமேடு என்னும் ஊருக்கு எதிர்த்திசையில் கடலடியில் 36 அடி ஆழத்தில் ஒரு புத்தர் சிலை கிடைத்துள்ளது. இதன் காலம் கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு.

8. சின்ன வானகிரிக்கு எதிர்த்திசையில் கடற்கரையிலிருந்து 4.50 கிலோ மீட்டர் தொலைவில் கடலுள் மூழ்கிய கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலில் நூற்றுக்கணக்கான ஈயக்கட்டிகளும், பீரங்கி ஒன்றும், வெடிமருந்து பெட்டிகளும், கொடி மரமும், மற்றும் சில செம்புப் பொருட்களும் கண்டறியப்பட்டிருக்கின்றன. ஈயக்கட்டிகளில் ஒரு பக்கம டபிள்யூ பிளாக்கெட் என்று ஆங்கில எழுத்திலும், மற்றொரு பக்கத்தில் 1791 அல்லது 1792 என்று எண்கள் எழுதப்பெற்று காணப் பெறுகின்றன. இவை கொண்டு இக்கப்பல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூழ்கியிருக்க வேண்டுமென்றும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் உணர முடிகிறது.

மேற்காணும் நான்கு கட்ட ஆய்வின் மூலம் மறைந்த மாநகர்ப் பூம்புகாரின் பகுதிகளைச் சிறிது சிறிதாகக் கண்டறிந்து விட முடியும் என்ற நம்பிக்கைத் துளிர்கிறது. தற்போது கிடைத்

துள்ள தடயங்களின் மூலம் பண்டைய பூம்புகார் துறைநகரம் சுமார் 100 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பெரும் நகரமாக விளங்கியிருக்கலாம் என்று கருத இடமேற்படுகிறது.

பூம்புகார்க் கடற்பகுதியில் மேலும் தொடர்ந்து கடலகழாய்வு செய்வதற்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மென்மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார்கள். அவர்களது அறிவுரையினாலும், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களின் வழிகாட்டுதலினாலும், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை முன்னாள் செயலர் திருமிகு வை. பழனிச்சாமி, இ.ஆ.ப அவர்களின் விடாமுயற்சியினாலும், பூம்புகாரில் சென்ற செப்டம்பர்த் திங்கள் 29-ஆம் நாள் ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் ஒன்று, இந்தியாவில் முதன்முதலில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வகழ்வைப்பகத்தில் கடலகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களும், கப்பலிலிருந்து வெளிக்கொணரப்பட்ட பொருட்களும், பண்டைத் தமிழகம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பொருட்களும், வெளிநாடுகளிலிருந்து தமிழகத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களும், தமிழகத்தில் கிடைத்துவரும் வெளிநாட்டுக் காசுகளும், மட்பாண்டங்களும் மற்றும் கைவினைப் பொருட்களும், வெளிநாட்டில கிடைத்து வரும் தமிழகத்தினுடைய காசுகள், பெயர் பொறித்த பானையோடுகள் தமிழ் எழுத்தில் உள்ள ஆவணங்கள் ஆகியவற்றின் ஒளிப்படங்கள், கலைப்பொருட்கள் ஆகியனவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பூம்புகார் மட்டுமல்லாது இன்னும் பல பண்டைய துறைமுகப் பகுதிகளில் ஆழ்கடல் அகழாய்வு செய்ய வேண்டியுள்ளது. மாமல்லை, தரங்கம்பாடி, நாகப்பட்டினம், கொற்கை, கன்னியாகுமரி ஆகிய பண்டைத் துறைமுகப் பட்டினங்களிலும் இவ்வாய்வை மேற்கொண்டால் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல தடயங்களை நாம் கண்டுபிடிக்க முடியும். குறிப்பாகக் கன்னியாகுமரிக்குத் தெற்கே கடற்பகுதியில் விரிந்த அளவில் ஆய்வை மேற்கொள்வது மிக முக்கியமானது. ஏனெனில் குமரிக்கண்டம் என்று ஒன்று தற்போதுள்ள கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்து கடலால் கொள்ளப்பட்டது என்பது சிலம்பு மூலம் புலனாகிறது. அங்கிருந்த

மதுரையில் (தென்மதுரை) முதற்சங்கம் இருந்ததாகவும், அச்சங்கத்தில் பல இலக்கியங்கள் அரங்கேற்றப்பெற்றன என்றும் இலக்கியம் மூலம் நமக்குத் தெரியவருகிறது. அப்பகுதி கடற்கோளால் கொள்ளப்பட்ட பொழுது அங்கிருந்து கபாடபுரத்துக்குத் தலைநகர் மாற்றம் செய்யப்பட்டு அங்கு இரண்டாம் சங்கம் அமைக்கப்பெற்றது. பின்னர் அப்பகுதியும் கடற்கோளால் அழிபட்டபோது தற்போதுள்ள மதுரைக்கு (வடமதுரை) மக்கள் குடிபெயர்ந்து மூன்றாம் சங்கம் நிலவியதாக இறையனார் களவியலுரை கூறுகிறது. பண்டைக் குமரிக்கண்டம் இருந்ததாகக் கருதப்பெறும் கடற்பகுதியில் நில இயல் ஆய்வு செய்த புவிஇயல் வல்லுநரான உருஷ்ய நாட்டறிஞர் கொண்டர்ட்டோவ் என்பவர் தற்போதுள்ள மனித இனத்தின் முன்னோடியினர் (HOMOSAPIANS) அப்பகுதியில் வாழ்ந்திருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இக்கருத்துக்கு மேலும் வலுவூட்டுவதாகக் குமரியையொட்டி முட்டம் என்னும் ஊர்ப் பகுதியிலிருந்து இன்றைக்குச் சுமார் 20,000 ஆண்டுகட்கு முற்பட்ட நுண்கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு, குமரியில் அருங்காட்சியகத்துறையால் அமைக்கப்பெற்றுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பெற்றிருக்கின்றன. மேலும் குமரியைச் சார்ந்த மீனவர்கள் குமரிக்குத் தெற்கே கடலில் மீன் பிடிக்கச் செல்கையில், பல பகுதிகளில் சில மேடான இடங்கள் கடலில் தென்படுகின்றன என்றும்; அப்பகுதியில் தாங்கள் வலையை வீசினால் வலை அறுந்து விடுகிறது என்றும் தெரிவிக்கின்றனர். ஆதலால் இப்பகுதியில் கடலகழாய்வு செய்வதற்கான திட்டம் ஒன்று தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இற்றைக்குக் கடலையொட்டி அமைந்திருக்கும் ஒவ்வொரு நாடும் தம் பண்டைப் பண்பாட்டுச் சிறப்பையும் நாகரிக மேம்பாட்டையும் கண்டறிய நில அகழாய்வோடு கடலகழாய்வையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாகக் கடலில் மூழ்கிப் போன கப்பல் ஒன்றைக் கண்டறிந்துவிட்டால் பல நூற்றாண்டு பாரம் பரியப் பெருமையை ஒரே நேரத்தில் எளிதாக உணர்ந்துகொள்ள முடியும் என்று தொல்லியல் அறிஞர்கள் நம்புகின்றனர். ஒரு கப்பலில் அதன் வடிவமைப்புக் கலையிலிருந்து, அதில் கண்டெடுக்கப் படும் பொருட்கள் அனைத்தும் பல பண்பாட்டுச் சின்னங்கள் ஆகும்

என்பது பொதுக்கருத்து. ஆதலால், மத்தியத் தரைக்கடல், கருங்கடல், இந்துமாக்கடல் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான கப்பலழிவுகள் நிகழ்ந்திருக்கின்றன எனபதைக் கருத்தில் கொண்டு, அவற்றுக்குத் தொல்பொருள வேட்டைக்காரர்களாலோ, அல்லது முத்துக் குளிப்பவர்களாலோ, அல்லது மீனவர்களாலோ யாதொரு அழிவும் நிகழ்ந்துவிடாமல் தடுப்பதற்கும்; கப்பலில் கண்டறியும் பொருட்கள், உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால் தக்க சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்கும் யுனெஸ்கோ நிறுவனம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இது சம்பந்தமாகத் தெளிவான சட்ட வரைவுகள் இல்லையென்று கருதப்படுகிறது. எனவே இது பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஒரு நல்ல முடிவு நிறுவுவதற்காக அனைத்து நாட்டு ஆழ்கடல் ஆய்வு வல்லுநர்களுக்கும், ஒரு சட்ட முன்வரைவை அண்மையில் யுனெஸ்கோ நிறுவனம் அனுப்பி வைத்துள்ளது. ஆதலால் நிலத்தின் மீது காணப்பெறும் மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பது எவ்வளவு இன்றியமையாதவை என்று கருதுகிறோமோ, அதேபோன்று நீரடியில் மறைந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான மரபுச் செல்வங்களையும் போற்றிப் பாதுகாத்திடல் நம் அனைவரின் தவிர்க்க இயலாத பெரும் கடமையாகும்.

2 பெருமுடி பரமேசுவரர் திருக்கோயில்

வே. இராமன்
ஸ்தபதி
தொல்பொருள் ஆய்வுத்துறை

அமைவிடம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சியிலிருந்து குமாரவயலூர் செல்லும் சாலையில் சோமரசன்பேட்டை என்னும் ஊருக்கு வடக்கே பெருங்குடி என்ற கிராமத்தில் இயற்கையான சூழலில் அமைந்துள்ளது அகத்தீசுவரர் என்னும் திருக்கோயில். சோமரசன் பேட்டை வரை சென்று வர நகரப் பேருந்து வசதிகள் உள்ளன.

ஊரும் பெயரும்

பெருங்குடி என்பது தற்பொழுது வழங்கி வரும் பெயராகும். தொடக்க காலத்தில் பெருமுடி என்று அழைக்கப்பட்டதாய்க் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன. பெருமுடி என்ற ஊரின் பெயர் பிற்சோழர் காலத்தில் பெருங்குடி என மாறி நிலைபெற்று விட்டது.

கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கியதாய் அமைந்துள்ள இத்திருக்கோயில் கருவறை, முகமண்டபம், பெருமண்டபம், அம்மன் கோயில், உற்சவர் மண்டபம், சண்டேசுவரர் கோயில், நந்திமண்டபம், பலிபீடம் மற்றும் கொடிபீடத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கோயில், கட்டமைப்பில் சிறியதாக இருந்தபோதிலும், கட்டடச் சிறப்பால் பெரும்புகழ் கொண்ட அழகிய திருக்கோயில் ஆகும்.

பரமேசுவரர்

மூலவர் 'பெருமுடி பரமேசுவரர் கோயில்' என்றும், 'திருப்பெரு முடிப் பரமேசுவரர் ஸ்ரீகோயில்' என்றும் அழைக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுச் சான்றுகள் உணர்த்துகின்றன. தற்போது மூலவரை

அகத்தீசுவரர் என்ற பெயரால் மக்கள் வழிபடுகின்றனர். அம்மன் பெரியநாயகி என்ற திருப்பெயரோடு விளங்குகின்றார்.

கோயிலின் காலம்

இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்கு காணப்படுவதால் சுந்தரசோழன் (கி.பி. 968) காலத்தில் இக்கோயில் எழுப்பப்பெற்றதாகக் கருதலாம்.

கல்வெட்டுச் சிறப்பு

இக்கோயிலில் பத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை சோழர், போசளர், பிற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளாக அமைந்துள்ளன. சுந்தரசோழனின் கல்வெட்டு உறத்தூர்க் கூற்றத்துப் புதுக்குடியைச் சேர்ந்த செம்பியன் உறத்தூர் நாட்டுக் கோனான மயிலைத்திண்டன் இருநூறு பொன் தந்து இக்கோயில் இறைவன் பெயரால் நிலம் வாங்கித் திருவுண்ணாழிகைப் புறமாகக் கோயிலுக்குக் கொடையளித்தான் என்று கூறுகிறது. இந்நில வருவாயில் வரி செலுத்தியது போக எஞ்சியுள்ளதைக் கொண்டு இறைவனுக்கு அமுது படைக்கவும் கோயிலில் விளக்கிடவும் பணியாளர்க்கு ஊதியம் தரவும் ஒழுங்கு செய்யப்பட்ட செய்தியைக் கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது.

திருப்பணி நடந்துகொண்டிருக்கும் காலத்தில் கல் தச்சர்களுக்குரிய தின ஊதியம் தரமுடியாமல் திருப்பணி தடைப்படுகிறது. அந்த நேரத்தில் திருப்பணி குறைவில்லாமல் தொடர்ந்து நடைபெற பொன் வேலை செய்யும் மருதாண்டான் மகன் கூத்தன் என்பவன் மூன்று கழஞ்சு பொன் தந்து திருப்பணி தொடர்ந்து நடைபெற உதவினான். மருதாண்டான் மகன் கூத்தனின் மகனான நல்லமங்கை என்பவனுக்குச் சிறுவயதில் கண்பார்வை இழந்து விடுகிறது. அதுசமயம் அவன் இறைவனிடம் தன்மகனுக்கு மீண்டும் கண்பார்வை வழங்க வேண்டிக்கொள்கிறான். இறைவனருளால் கண்பார்வை திரும்பவும் கிடைக்கப்பெறுகிறான். கண்பார்வை கிடைத்தமைக்காகப் பெருங்குடி இறைவனுக்கு ஒரு கழஞ்சு எடையுள்ள பொன்னால் செய்யப்பட்ட நெற்றிப்பட்டம் செய்து வழங்கி மகிழ்ச்சியடைந்த செய்தியை வீரராமநாதனின் கல்வெட்டொன்று சிறப்பாக கூறுவதைக் காண்கிறோம்.

கருவறை

சதுர அமைப்புடைய கருவறையானது பாதக்கட்டு, பாதச்சுவர், கூரை என்றவாறு அமைந்து அதற்குமேல் கழுத்து, சிகரம் எனக் கட்டமைக்கப்பட்டுள்ளது. விமானம் உபானம் முதல் கழுத்துக்கு மேல்மட்டம் வரை கற்றளியாக அமையப்பெற்று அதற்கு மேல் இடம்பெறும் வேசர வடிவிலான சிகரம் செங்கற்கட்டு அமைப்பாகவும் அமையப்பெற்றுள்ளது.

பாதத்திற்கு அலங்காரக் கட்டாக அமையும் தாங்குதளம் (பாதக்கட்டு) பாதபந்த வகையைச் சார்ந்ததாகும். இத்தாங்குதளம் உபானம், ஜகதி, எண்பட்டகுமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், மேல் கம்பினைக் கொண்ட பட்டிகை என்ற உறுப்புகளைக் கொண்டுள்ளது. இவ்வுறுப்புகளைக் கொண்ட பாதபந்தக் கட்டமைப்பை மகேந்திரவர்மன் காலத்து மாமண்டூர்க் குடைவரையிலும், மாமல்லபுரம் ஒரு கல் தளியான அர்ச்சுனன் ரதக்கோயிலிலும் பின்னாளில் சோழர்களாலும் பெரிதும் விரும்பி கட்டமைக்கப்பட்ட சிறப்பான கட்டமைப்பாகும். இவ்வெதிட்டான உபான மட்டத்தில் வடக்குப் பக்கத்தில் நாளம் சற்று மாறுபட்ட வகையில் கோமுகி இடம்பெறாமல் சிறு துவார அமைப்போடு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பாதக்கட்டிற்கு மேல் எழும்பும் பாதப் புறச்சுவரில் நான்முக அரைத்தூண்கள் பக்கத்திற்கு நான்கென இடம் பெற்றுள்ளன. தூண் பகுதியானது கால், மாலைத்தொங்கல், மாலைக்கட்டு, பத்மக் கட்டு, கலசம், தாடி, குடம். பலகை, வீரகண்டம் மற்றும் போதிகை என்ற அலங்கார அணிகளோடு காணப்படுகிறது. இவ்வங்க அமைப்பில் இடம்பெறும் அலங்கார சிற்றுறுப்புகள் யாவும் தொடக்க சோழர் தலைமுறையினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. ஒவ்வொரு தூண் அமைப்பில் இடம்பெறும் மாலைத்தொங்கல் மற்றும் மாலைக்கட்டுப் பகுதியில் இடம்பெறும் கருக்கணிகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் வடிக்கப்பட்டுள்ளன. மாலைத்தொங்கல், மாலைகட்டு சிலவற்றுள் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் வடபுறத்தே காணப்பெறும் குடக்கூத்துச் சிற்பமும், தென்புறத்தே காணப்பெறும் பெருமாள் தேவியருடன் கூடிய சிற்பத்

தொகுதியும் குறிப்பிடத்தக்கதாகும். கலசம் மற்றும் குடம் பகுதி களில் பூரிமம் போன்ற கருக்கணிகள் ஒப்பனைகளாக அமைந்து திகழ்கின்றன.

கூரை

பாத சுவற்றை மூடும் வகையில் அமையும் கூரையானது உத்திரம், கம்பு, பூதவரி, கபோதகம், யாளிவரி என்ற உறுப்பு களைப் பெற்றுள்ளன. பூதவரியில் கணங்கள் பல்வேறு நிலைகளில் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. மேற்குப்பக்கம் பூதவரியில் சிவ லிங்கத்திற்கு மலர் வைத்து வழிபடும் மந்தியின் சிற்பம் நம் கவனத் தை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கவிழ்ந்த நிலை யில் காணும் கபோதகத்தின் நுனியில் வட்டங்கள் அழகுற இடம் பெற்றுள்ளன. கபோதகத்தின் திருப்பங்களில் கோடிப்பாளையும், இடையே கூடுகளும் கபோதகத்தைச் சிறக்கச் செய்கின்றன. கபோத கத்தின் மேல் அமையும் பூமிதேச மட்டத்தில் திருப்பங்களில் அமர்ந்த நிலையில் சோழர் கலைமுறையில் நந்திகள் கம்பீரமான தோற்றத்தில் இடம் பெற்றுள்ளன.

தேவகோட்டச் சிற்பங்கள்

கருவறை புறச்சுவர்த் தேவகோட்டங்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும், மேற்கில் அம்மையப்பரும், வடபுறம் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். இச்சிற்பங்கள் யாவும் சோழர் கலை முறை யினைக் கொண்டமைந்துள்ளன. கோட்டங்களுக்கு மேல் மகர தோரணங்களும், அவற்றுள் சிற்பத் தொகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

முகமண்டபம்

முகமண்டபமானது கருவரைச் சுவற்றிலின்றும் சற்றுஉள் ளடங்கிச் செல்கிறது. வடக்கிலும் தெற்கிலும் தேவகோட்டம் இடம் பெறவில்லை. இம்மண்டப புறச்சுவற்றின் தூணமைப்பும், அலங்கார அணிகளும் கருவறை புறச்சுவர் தூண்களின் அமைப்பு போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளன. வனப்புமிக்க முகமண்டப நுழைவு வாயிலின் மேல் குட்யதோரணம் அழகுற அமைந்துள்ளது. தோரணத்தின் மையத்தில் விநாயகர் உருவம் காணப்படுகிறது.

தோரணத்தை சிம்மம், மான், வேடன் போன்ற சிற்றுருவச் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இதுபோன்ற அமைப்பினை எல்லாக் கோயிலகளிலும் காண்பதரிது.

நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் இடம்பெறும் கோட்டங்களில் வாயிற் காவலர்கள் பாதம் முதல் சிரசு வரை சோழர்கால அணிகலன்களைப் பெற்று பெருமிதமான முகப் பொலிவுடனும் கம்பீரமான நிலையிலும் காணும் இச்சிற்பங்கள் சிற்பியின் கலைத் திறனுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. இடப்புறம் காணும் வாயிற்காவலரின் இடது பக்க செவிக்குண்டலத்தில் குறளர் ஒருவரின் ஆடற்கோலம் இடம் பெற்றுள்ளது. இதுபோன்ற குண்டலம் வேறிடங்களில் எங்கும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

அகத்தீசுவரர்

பெருமுடி ஈசுவரி, பெருங்குடி ஈசுவரர் என்று அழைக்கப்பட்டு தற்போது அகத்தீசுவரர் என வணங்கப்பெறும் இறைவன் வட்ட வடிவமான ஆவுடையாரின் மேல் லிங்கத் திருமேனியராகக் காணப் படுகிறார்.

சிகரம்

சதுர வடிவிலான கருவறையின் மேல் வேசர வடிவில் அமையும் சிகரமானது வேதிகை. கழுத்து என்ற உள் உறுப்புக்களைக் கொண்டதாகும். வேசர வடிவினதாய் அமையும் வேதிகையின்மேல் சற்று உள்ளடக்கி இடம்பெறும் கழுத்துப் பகுதியும் வட்ட வடிவில் உள்ளது. நான்கு புறங்களிலும் கோட்டங்கள் முன் வந்ததாய் அமைந்து, பெருநாசிகைகள் இடம் பெற்றுள்ளன. கோட்டங்களில் அமர்ந்த நிலையில் கிழக்கில் முருகன், மேற்கில் திருமால், தெற்கில் வீராசன ஆலமர் அண்ணல், வடக்கில் நான்முகன் இடம்பெற் றுள்ளனர். திருமாலின் மேற்கரத்தில் இடம்பெறும் சக்கரத்தின் அமைப்பு நோக்கத்தக்கதாய் உள்ளது.

கழுத்தின் வலபியில் அன்னங்கள் சுற்றி வருவதாய் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சில அன்னங்களின் தோகைகள் மிகவும் அழகுபட நுணுக்கமாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளன. வலபியில்

இதுபோல் அன்னங்கள் அமைக்கும் முறை பழமையானதாகும். இக்கலைமுறை முற்சோழர் காலத்திலும் பின்பற்றப்பட்டமைக்குக் கீழையூர் அவனி கந்தர்ப்ப ஈசுவரகிருக வளாகத்திலுள்ள தென் வாயில் கோயில் சான்றாக அமைந்துள்ளது. வலபிக்கு மேல் இடம் பெறும் தூக்கோடு பகுதியில் கூடுகள் காணப்படுகின்றன. இக்கூடு அமைப்பு எல்லாக் கோயில்களிலும் இடம்பெறுவது குறைவே. சிகரமானது செங்கற்சுதையினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இறுதியில் காணும் தூபி தற்சமயம் இல்லை.

அம்மன் கோயில்

தெற்கு நோக்கியதாய் அமைந்துள்ள அம்மன் கோயில் காலத்தால் பிந்தியது எனலாம். நின்ற நிலையில் அம்மன் திருவுருவம் நான்கு கரங்களோடு காட்கியளிக்கின்றது. விமான சிகரம் செங்கற்கட்டாக அமைந்து திராவிடக் கலைமுறையில் அமைந்துள்ளது. முகமண்டபத்தின் முன் படிக்கட்டுப் பீடம் உள்ளது. மேல் படிக்கட்டு அருகே பெருமாள் திருமகளை அணைத்தவாறு அமர்ந்துள்ளார் மேலும் இம்மண்டபத்தில் கிழக்கு நோக்கி முருகன், திருமால், பிள்ளையார் ஆகிய திருவுருவங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்.

திருச்சுற்றுப்பாதையில் வடக்குப்பக்கம் தெற்கு நோக்கிச் சோழர்காலச் சண்டேசுவரர் சன்னதி இடம்பெற்றுள்ளது. பரமேசுவரர் கோயிலுக்கு எதிரே நந்திமண்டபம், பலிபீடம், கொடிப் பீடம் ஆகியன அமைந்துள்ளன. நந்தி மண்டபத் தூணை அருமலையுடையான் சேந்தங்காடன் எடுப்பித்ததாக மண்டபத் தூண் கல்வெட்டுச் செய்தியால் அறிகிறோம்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இக்கோயிலை வரலாற்றுச் சின்னமாகப் போற்றிப் பாதுகாத்து வருகிறது.

3 சிற்பக் கலையின் மாட்சி

முனைவர். ஏ. ஏகாம்பரநாதன்
பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்துறை
சென்னை பல்கலைக்கழகம்

கலையுணர்வும், சமயப்பற்றும் கொண்ட மன்னர்களும், மக்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் எண்ணற்ற கலைக் கோயில்களையும், கவின்மிகு சிற்பச்செல்வங்களையும் வண்ண ஓவியங்களையும் உருவாக்கியிருக்கின்றனர். இவற்றுள் சிற்பங் களின் வாயிலாக அக்காலச் சமய உணர்வுகளையும், கலைஞர்களின் கைவண்ணத்தினையும், மக்களது பண்பாட்டுக் கூறுகளையும், இறைத்திருவுருவ இயலில் ஏற்பட்ட மாறுதல்களையும் நன்கு உணர முடிகிறது. மேலும் இறைவடிவங்கள் அவற்றை வழிபட்ட பல்வேறு தரப்பட்ட மக்களின் உள்ளப்பாங்கினையும் பிரதி பலிக்கும் வகையில் இருப்பதைக் காணலாம்.

தமிழகத்தை ஆண்ட பல்லவர், பாண்டியர் சோழர் விசயநகரமன்னர்கள், நாயக்கர்கள் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் சைவ, வைணவ சமயச் சார்புடைய சிற்பங்கள் மிகுதி யான அளவில் தோற்றுவிக்கப்பட்டிருப்பதை நாமறிவோம். இவை அந்தந்த காலக் கலைப்பாங்கினைத் தெளிவுற விளக்குபவையாகும். அதே சமயத்தில் இவையனைத்துமே மிகுந்த உன்னத நிலையை மாட்சிமையைப் பெற்றிருக்கின்றன எனக் கூறுவதற்கில்லை. சமய அடிப்படையில் இந்தச் சிற்பங்கள் எல்லாக் காலங்களிலும் ஒரே விதமான உண்மையினை அல்லது கருத்தினை விளக்குபவை யாக இருப்பினும், கலைக்கண்ணோட்டத்தில் நோக்கும்போது அவற்றின் மாட்சி ஒன்றுபோல இருப்பதில்லை. அவ்வாறு அணுகும்போது தமிழகத்திலுள்ள, வெவ்வேறு காலக்கட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட இறைவடிவங்களுள் மாட்சிமை மிக்கவை சோழப்பேரரசர்கள் காலத்தவைதான் என்பது நன்கு புலனாகும், அதாவது இக்காலச்சிற்பங்களில்தான் இறைமை, கலைமேம்பாடு. மானிடகுண நலன்கள், மற்றும் சமயத்தத்துவங்கள் போன்றவை முழுமையாகப் பரிணமிக்கின்றன என்பதாகும்.

பொதுவாகக் கூறின், பல்லவர் காலச் சிற்பங்கள் நீண்ட உடலமைப்புடன், அதிகவேலைப்பாடின்றி, எளிமை யானவையாக இருப்பதுண்டு. இவற்றில் வீரம், சினம் போன்ற குணங்களை விளக்கவேண்டிய நிலையிலும் ஓரளவு மென்மையான தன்மையையே மிகுதியாகக் காணலாம். முற்காலச் சோழராட்சியில் நிறுவப்பெற்ற மிகுதியான சிற்பங்கள் பல்லவ கலைப் பாணியை அடியொற்றியவையாகும். இருப்பினும் படிப்படியாக இந்தக் காலக்கலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு அடுத்தபடியாக உள்ள இடைக்காலச் சோழர் சிற்பங்கள் சிறிது தடித்த உடலமைப்புடன், கம்பீரமான தோற்றம் உடையன வாகும். இவற்றில் முகக்குறிப்பு, அவயவநெகிழ்ச்சி, வீரம், கோபம் கருணை, மென்மை போன்ற பல்வேறு குணநலன்கள் முழுமை யாகப் பிரதிபலிப்பதைக் காணலாம்

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியினை அல்லது கருத்தை விளக்கும் வகையில் தோற்றுவிக்கப் பட்ட ஒரு திருவுருவ அமைப்பு, அந்தக் கருத்தை மட்டிலும் அறிவுறுத்துவதாக அமையாமல் கலையின் உன்னதத்தன்மையினையும், இறையுணர்வின் ஒப்பற்ற நிலையையும் உடற்கூறுகளின் சிறப்புத் தன்மையினையும், மக்கள் பண்பாட்டின் நயமான பாங்கினையும், அரசோச்சியவர்களது வலிமையினையும், இன்னும் பல்வேறு அம்சங்களையும் படம்பிடித்துக் காட்டும் மாட்சிமை உடையதாக இருக்கின்றன என்பதை நன்கு உணர முடிகிறது.

பிற்காலச் சோழராட்சியில் இந்த உன்னத நிலையில் சிறிது தொய்வு ஏற்பட்டு, அதற்குப் பிறகு விசய நகர, நாயக்கராட்சியில் இறைவடிவங்களில் மானிட குணநலன்கள் மிகுதியாகக் காட்டப் பட்டிருக்கின்றனவேயன்றி, தெய்வாம்சம் மிக்க கலைப்பண்புகள் மிகவும் குறைந்துள்ளன. அக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், பொருளாதார நெருக்கடிகள், அயல் நாட்டவரின் மிகுதியான படையெடுப்புகள், சமுதாய-பண்பாட்டுச் சீரழிவு போன்றவற்றால் இத்தகைய நிலை ஏற்படலாயிற்று. இவ்வாறு தமிழக வரலாற்றில் கலையும், இறைமையும், சமய உணர்வுகளும் ஒன்றோடொன்று கலந்து மாட்சிமைபெற்று மலர்ந்த தெய்வீகத் திருவடிவங்கள் சோழர் காலத்தவைதாம் என்பது அறியற் பாலதாகும்.

4

கேரள மாநிலம் எடக்கல் மற்றும் செருபுழா ஆற்றங்கரை வடமொழி மற்றும் தமிழ்க்கல்வெட்டுகள்

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

கேரள மாநிலம் திருச்சூரில் 1998 மேத்திங்கள் 15, 16, 17 ஆகிய நாள்களில் நிகழ்ந்த இந்தியக் கல்வெட்டியல் கழக 24-ஆம் ஆண்டு மாநாட்டில், கல்வெட்டறிஞர் திரு. ஐராவதம் மகாதேவன், இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையுரையாற்றினார். அதுபோழ்து கேரளத்துத் தொன்மைக் கல்வெட்டுகள் குறித்த ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் படித்தளித்தார்[1] மிகத்தெளிவான படங்களுடன் அக்கட்டுரை வழங்கப்பட்டது. அக்கட்டுரையின் ஒரு பிரதியை எனக்கு அன்புடன் அனுப்பி வைத்தார். இச்கட்டுரை கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் எடக்கல் மலையில் உள்ள ஏழு கல்வெட்டுகள் பற்றியும், மலப்புரம் மாவட்டம் நீலாம்பூர் காட்டுப்பகுதியில் செருபுழா மற்றும் கறிம்புழா ஆறுகள் கூடுமிடத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் செருபுழா ஆற்றங்கரையில் நீரில் பாதி மூழ்கியுள்ள கல்லில் உள்ள ஒரு கல்வெட்டுப் பற்றியும் விரிவாகவும், தெளிவாகவும் விளக்குகிறது. இந்தக் கல்வெட்டுகளில் சில திரு. ஐராவதம் மகாதேவன் மற்றும் அவர் குழுவினரால் அரிதின் முயன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு மகாதேவன் அவக்களால் படிக்கப்பட்டவை. பிற இதுகாறும் தெளிவாகப் படிக்கப்படாமல் இருந்து இவரால் முதன்முதலாகப் பொருள் புரியும் வண்ணம் படிக்கப்பட்டவை ஆகும். இச்செயற்கரிய செயலுக்கு இப்பெருந்தகை மிகவும் பாராட்டப்பட வேண்டியவராவார்.

இவர் படித்தளித்த வாசகங்களும், பொருளும் பின்வருமாறு:

1. வடமொழிக் கல்வெட்டு

'ஸ்ரீவிஷ்ணு வர்ம்ம[ண:] குடும்பிய குல
வர்[த்]தனஸ்ய லிகித[ம்]'

இதன் பொருள் "ஸ்ரீவிஷ்ணுவர்மனின் குடும்பத்தினர் மற்றும் சந்ததியினர் செழிப்பிற்காக எழுதப்பட்டது" என்பதாகும். இக் கல்வெட்டின் காலம் சுமார் கி பி. 5-ஆம் நூற்றாண்டாகும்.

2. பண்டைத் தமிழ்க் கல்வெட்டு

'கோபூதிவீர'

'சிற்றரசன் பூதிவீரன்' என்பவனின் பெயரைக் குறிப்பிடுகிறது. பூதி என்ற பெயர் தமிழ் வேளிரின் பொதுப்பெயராகவும் காணப் படுகிறது. கல்வெட்டின் காலம் கி.பி. 2-3 நூற்றாண்டாகும்.

3. பண்டைத் தமிழ்க் கல்வெட்டு

'கோவாதான்'

அரசன் ஆதனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டின் காலம் கி.பி. 2-3 ஆம் நூற்றாண்டாகும்.

4. பண்டைத் தமிழ்க் கல்வெட்டு

'கடும்மி புத சேர'

கல்வெட்டின் இறுதியில் ஒரு குறியீடு உள்ளது. அதனைப் பனைமரமாகக் கருதலாம் என்று குறிப்பிட்டுள்ளார். இக்கல் வெட்டில் "புத" என்ற பிராகிருதச் சொல்லும் தமிழுடன் கலந்து எழுதப்பட்டுள்ளது. கடும்மி என்பதைக் கடுமி என்று படிக்க வேண்டும். கடுமையான, வீரம் நிறைந்த என்று பொருள் கொள்ள லாம். கடும் என்ற சொல்லாட்சி கடுங்கோன் என்ற பெயரில் காணப்படுகிறது. எனவே "கடும்மான் சேரன்" என்று இக்கல் வெட்டிற்குப் பொருள் கொள்ளலாம். இக்கல்வெட்டு சுமார் கி.பி. 2-3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

5. பண்டைத் தமிழ்க் கல்வெட்டு

'ஒபனப விரஅ'

"ஒபனப" என்பதனை ஒப்பன் + அப்ப என்று கொண்டு ஒப்பன் என்பது மனிதப்பெயர். ஒப்பு என்ற வேர்ச்சொல்லி

லிருந்து வந்தது. ஒப்பு என்பதற்கு அழகு என்று பொருள். 'அப்ப' என்பது மரியாதை நிமித்தம் சேர்க்கப்பட்ட பின்னொட்டுச் சொல் என்றும் சொல்லலாம் 'விரஅ' என்பதை வீரஅ என்று படித்து 'வீரன்' என்பதைக் குறிக்கிறது எனலாம். 'ஒப்பனப்ப வீரன்' என்று ஒரு வீரனின் பெயரை இக்கல்வெட்டு குறிக்கிறது என்று பொருள் கொள்ளலாம். கல்வெட்டின் காலம் சுமார் கி.பி. 2–3 ஆம் நூற்றாண்டாகும்.

6. வட்டெழுத்துக் கல்வெட்டு

'பல்புலி தாத்த காரி'

'தாத்தன் என்பதற்கு தந்தை என்று பொருள். இங்கு காரியின் தந்தை பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'பல்புலி' என்பது பலபுலிகள் என்று பொருள்படும். இங்கு இடப்பெயராகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. 'காரி' என்பது கருமையான ஒருவன் என்று பொருள்படும். விஷ்ணு அல்லது கிருஷ்ணன் போன்ற கடவுளரின் பெயராக இலக்கியங்களில் காணப்படுகிறது. இங்கு மனிதனின் பெயராக உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனலாம்.

7, வட்டெழுத்துக் கல்வெட்டு

'வெங்கோமலை கச்சவநுசத்தி'

'வெங்கோமலை என்பது பல்லவ சிம்மவர்மனின் மங்கலூர்ச் செப்பேட்டில் குறிக்சப்படும் 'வெங்கோ ராஷ்டிரமா'க இருக்கலாம் பிராகிருதத்தில் 'காஸ்ஸவ' என்றும், சமஸ்கிருதத்தில் காஸ்யப என்றும் காணப்படும் கோத்திரப் பெயராக 'கச்சவநு' என்பதைக் கொள்ளலாம். இச்சொல் 'நு' என்று முடிவது கன்னட மொழித் தாக்கம் என்று கருதலாம். 'சத்தி' என்பது சமஸ்கிருதத்தில் உள்ள 'சக்தி' என்பதாகலாம். இது மனிதனின் பெயராகும். எனவே இக்கல்வெட்டு 'வெங்கோமலைப் பகுதியைச் சேர்ந்த காஸ்யப கோத்திரத்தைச் சேர்ந்த சத்தி' என்ற ஒருவரின் பெயரைக் குறிக்கிறது எனலாம். இக்கல்வெட்டின் காலம் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டு எனலாம்.

8. வட்டெழுத்துக் கல்வெட்டு

'மாசகோடு நீரண
வாய்'

'மாசகோட்டில் உள்ள நீர் அணையின் வாய்' என்பது இதன் பொருளாகும். 'மாசகோடு' என்பதற்கு இருண்டமலை என்று பொருள். 'நீர்' என்பது தண்ணீர் அல்லது தண்ணீரின் போக்கைக் குறிப்பது. 'அண' என்பது அணை. வாய் என்பது அதிக அளவு நீர் தேங்கும்போது நிரம்பி வெளியேறும் கலிங்கின் தலைப் பகுதியைக் (Sluice head) குறிக்கும். எழுத்தமைதியில் இக்கல்வெட்டு தென்னகப் பிராமி, தமிழ்-பிராமி, வட்டெழுத்து ஆகியவற்றின் கலவையாக உள்ளது.

திரு. எம்.ஜி.எஸ். நாராயணன் படித்தளித்த வாசகமும், பொருளும்

இந்த எட்டாவது கல்வெட்டைப் பற்றி திரு. எம்.ஜி.எஸ். நாராயணன் 1971ல் திருவனந்தபுரத்தில் நிகழ்ந்த முதலாவது திராவிட மொழியியல் மாநாட்டில் "A Tamil Inscription from Nilambur Forest, Kerala என்ற தலைப்பில் ஒரு கட்டுரை படித்துள்ளார்[2] அதனில் அவர் இக்கல்வெட்டின் வாசகத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'மாவகுடு நீரண
வாற்'

இதன் பொருள் 'விலங்குகள் நீரருந்த வருகின்றன' என்று கொண்டுள்ளார்."

மறுஆய்வு

இந்த எட்டுக் கல்வெட்டுகளில் 5, 6, 8 ஆகிய மூன்று கல்வெட்டுகள் திரு. ஐராவதம் மகாதேவன் வெளியிட்டுள்ள மசிப் படங்கள் மற்றும் நிழற்படத்தைக் கொண்டு பார்க்கும்போது சற்று மாற்றிப் படிக்க வேண்டியவையாக உள்ளன.

ஐந்தாவது கல்வெட்டைத் திரு. ஐராவதம் மகாதேவன்,

'ஒபனபவிரஅ'

என்று படித்து ஒப்பனப்ப என்ற பெயருடைய வீரன் என்ற பொருள் கொண்டுள்ளார். இக்கல்வெட்டில் உள்ள நான்காவது எழுத்து அவர் வெளியிட்டுள்ள மசிப்படத்தில் 'ய' என்று தெரி

கின்றது. 'அ' என்று அவர் படித்துள்ள எழுத்து 'லி' போன்றுள்ளது. இகர உயிர்மெய்க் குறி பொதுவாக நெடுங்கோட்டில் வலப்புறம் காணப்படும். இங்கு இடப்புறம் காணப்படுகிறது. எடக்கல்லில் உள்ள மேலே குறித்த 4-ஆவது கல்வெட்டில் 'கடும்மி' என்பதில் 'மி' யின் இகர உயிர்மெய்க் குறியீடும் இடப்புறமே காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எனவே இக்கல்வெட்டை,

'ஒபனய் விரலி'

என்று படிக்கலாம். அதாவது 'ஒ(ப்)பனய் விரலி - அழகுபடுத்தப் பட்ட விரலையுடைய பெண் என்று பொருள்படுகிறது. எனவே இது ஒரு பெண்ணின் பெயரைக் குறிக்கிறது எனலாம்.

ஆறாவதாக உள்ள கல்வெட்டைப் 'பல்புலி தாத்தகாரி' என்று திரு ஐராவதம் மகாதேவன் படித்துள்ளார். பல்புலி என்பதற்குப் பலபுலிகள் என்று பொருள். இருந்தபோதிலும் இங்கு இடப் பெயரைக் குறிப்பதாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இக்கல்வெட்டில் உள்ள முதல் எழுத்து 'வ' என்றேயுள்ளது மூன்றாவது எழுத்தாக உள்ள 'பு' எழுத்தில் உள்ள 'ப' அமைப் பிலிருந்து இம்முதல் எழுத்து மாறுபட்டுச் சற்று வளைந்து காணப் படுகிறது. எனவே இக்கல்வெட்டை,

'வல்புலி தாத்தகாரி'

என்று படிக்க வேண்டும். 'வல்புலி' என்பது 'வலிமை மிக்க புலி' என்று பொருள்படும். எனவே புலியைப்போல வலிமை மிகுந்த தாத்தகாரி என்பவனை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது எனப் பொருள் கொள்வதே சரியாகத் தோன்றுகிறது.

எட்டாவது கல்வெட்டை திரு எம்.ஜி.எஸ். நாராயணன் படித் தளித்த வாசகத்தோடு அவரிடம் இருந்த நிழற்படத்தையும் வெளி யிட்டு, திரு. ஐராவதம் மகாதேவன் தாம் திருத்தம் செய்து படித்த வாசகம்

'மாச கோடு நீரண
வாய்'

என்பதாகும். 'கோடு' என்று படிக்கப்பட்ட சொல்லில் உள்ள 'கோ' 'டு' ஆகிய எழுத்துகள் அவரது கட்டுரையோடுள்ள நிழற்

படத்தில் 'தோ', 'ட' என்றுதான் காணப்படுகின்றன. கல்வெட்டு எண் 6 படம் எண் 2-ல் காணப்பெறும் 'தாத்தகாரி' என்ற பெயரில் உள்ள 'த்த' என்ற எழுத்துகள் போன்றுதான் 'தோ' என்ற எழுத்தில் உள்ள 'த' உருவமும் உள்ளது. 'நீரண' என்பதில் உள்ள 'ண', வட்டெழுத்துக் கல்வெட்டு என்பதால், எண் '3' ன் அமைப்மைப் போன்று அமைய வேண்டும். இங்கு அப்படிக் காணப் பெறவில்லை எனவே இதனை 'னா' என்று கொள்வதே சரியாக இருக்கும். அவ்வாறு கொள்ளின் இக்கல்வெட்டின் வாசகம் பின் வருமாறு அமையும்.

'மாசதோட நீர் னா
வாய்'

இதனை மாச[ா]த்தனின் அல்லது மாச[ா]த்துவின் நாவாய் என்று பொருள் கொள்ளலாம். இவ்வாறு பொருள் கொள்ளலே பொருத்தமாகத் தோன்றுகிறது. மாச[ா]த்தன் என்பது ஆட்பெய ராகும். மாச[ா]த்து என்பது வணிகக் குழுவின் பெயராகும்.

5-ஆம் எண் கல்வெட்டின் காலத்தைக் கி. பி. 2-3 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும்; 6 மற்றும் 8-ஆம் எண் கல்வெட்டுகள் கி. பி. 5-6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம் என்றும் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் கூறியுள்ள கருத்து ஏற்கக் கூடியதாக உள்ளது.

மேற்காணும் கல்வெட்டுகள், பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகச் சேரநாடு விளங்கியது என்பதற்கு மேலும் வலிமை சேர்க்கும் மறுக்க இயலா சான்றாதாரங்களாக விளங்குகின்றன.

---

1. The Earliest Inscriptions of Kerala, XXIV Annual Congress of the E. S. I.
2. Proceedings of the First Conference of Dravidian Linguists, Trivandrum, 1971 (1972). pp 317–321.

5 சித்தம்பாக்கம் கோயிற் கதவு கல்வெட்டு

க. குழந்தைவேலன்
தொல்லியல் ஆய்வாளர், சென்னை

தமிழ் நாட்டில் செதுக்கப்பட்ட சிற்பங்களின் கீழும், வடிக்கப் பட்ட திருமேனிகளின் கீழும், படைக்கப்பட்ட பரிகலன்கள் மணிகள் சங்குகளின் மீதும், வெட்டப்பட்ட செக்குகளிலும் கல் வெட்டுக்களைப் பொறித்து கொடை ஆவணமும் கொடைப் பொருளும் ஒருசேர காக்கப்பட்ட மரபு இருந்துள்ளது. பிற்காலத் தில் கொடையும் கொடைப் பொருளும் அருகிவிட்ட நிலையிலும் பண்டைய மரபில் பொறிக்கப்பட்ட கதவு கல்வெட்டொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கதவு செய்யப்பட்ட மரம், கல்லும் மாழையும் (உலோகம்) போல காலத்தை வென்று நிலைக்காதென்றாலும் கொடைப்பொருள் உள்ள வரையேனும் கொடை ஆவணமும் நிலைபேறுடையதாக இருக்குமன்றோ.

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் - மெய்யூர் சாலையில் திருவள்ளூரில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது சித்தம் பாக்கம் என்னும் சிற்றூர். ஊர் சிறிதாயினும் பேர் பழையது. இவ்வூரைத் தித்தும் பாக்கம் என்றே பண்டைய கல்வெட்டுகள் அழைக்கின்றன. தித்தம் என்பது காலப்போக்கில் சித்தம் என மருவி சித்தம் பாக்கம் என அழைக்கப்படுகிறது.

சித்தம்பாக்கத்தில் உள்ள அகளங்கீசுவரமுடையார் கோயில் ஒரு பழமை வாய்ந்த கோயிலாகும். சோழ அரசன் முதலாம் குலோத்துங்கன், கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் அகளங்கன் என்ற சிறப்புப் பெயரால் பாராட்டப்பட்டவன். இக்கோயில் அகளங்கீசுவரம் எனப் பெயர் பெற்றிருப்பதாலும், இக்கோயில் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டது முதலாங் குலோத்துங்கன்

கல்வெட்டாதலாலும் இக்கோயில் குலோத்துங்கன் காலமாகிய 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

பழமை வாய்ந்த இவ்வகளங்கீசுவரமுடையார் கோயில் கோபுர வாயிற் கதவு 100 ஆண்டுகளுக்கு முன்னர் பழுதுபட்டுக் கிடந்தது போலும். எனவே இக்கோயிலின்பால் ஈடுபாடு கொண்டவரும் இக்கோயில் அறங்காவலர் பொறுப் பெற்றிருந்தவருமான முனியப்பச் செட்டியார் மகன் சுப்பராய செட்டியார் 'திருக்கத வொன்றைச் செய்தளித்தார்'. செய்தளித்ததோடு அந்த செய்தியை பண்டை நாளில் கல்லில் எவ்வாறு எழுத்துக்களைப் பொறித்து வைத்தார்களோ அதேமுறையில் குடைந்து வெட்டப்பட்டுள்ளது ஒரு சிறப்பாகும்.

இக்கோபுர வாயிற்கதவு செய்து முடிக்க இரண்டரை ஆண்டுகள் ஆகியுள்ளது. இக்கதவுப்பணி கி.பி. 1889-ஆம் ஆண்டு சூன் மாதம் மூன்றாம் தேதி தொடங்கி 1891-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாள் நிறைவுற்றதெனக் கல்வெட்டு கூறுகிறது. இத் துணைக்காலம் எடுத்துக் கொண்டமைக்குரிய வேலைப்பாடோ பருமையோ இதில் காணப்படவில்லை. 15-16ஆம் நூற்றாண்டு முதலாக கோயிற கொடைகள் வரவரக் குறைந்து வந்தமையாலும் மக்களிடத்தில் கோயிலின்பால் ஏற்பட்ட ஈடுபாட்டுத் தொய்வாலும் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்கலாம். எனினும் பண்டைய மரபில் நமக்குக் கிடைக்கும் கொடைப் பொருள் மீதான கல்வெட்டுக்களில் இது குறிப்பிடத்தக்க ஒன்று.

கொடைப் பொருள்களில் - அதிலும் மரங்களில் - கல்வெட்டுப் பொறித்தல் அருகிக் காணப்படுவ தொன்று. அஃதும் கல்வெட்டுக் களே அருகிக் காணப்படும் 18—19ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் அருமையாகக் கிடைக்கும் (மரக் கல்வெட்டு) கதவுக் கல்வெட்டு குறிப்பிடத்தக்க ஒன்றே. அக்வெட்டின் வாசகம் வருமாறு.

1. கலியுகாதி சதூகூ0 சாலிவாக
2. ன சகாப்தம் சதூஅயக க்கு இங்கி
3. லீஷ் வருஷம் சதூஅஅக ஹு 1889 சூன் மீ 3 உ க்கி
4. தமிழ் விரோதி ஹு வையாசி மீ 22 உ சித்தம் பா

5. க்கம் கிறாமம் ஸ்ரீ அகளிங்கீஸ்வரர்
6. சுவாமியார் தேவஸ்தானம் தர்ம்ம கர்த்
7. தர் வேட்டத்தி மகா ரிஷி கோத்திரம்
8. சி. முனியப்ப செட்டியார் குமாரர்
9. சுப்பறாய செட்டியாறால் இந்த கதவு
10. வேலை ஆறம்பித்து 1891 ஷ டிசம்பர்
11. மீ 10 உ க்கி தமிழ் கர ஷ கார்த்திகை
12. மீ உகூ ஆம் உ குருவாரம் கனிஷ்ட்ட [ஆ]ல் ஷை க
13. தவு வேலை பூர்த்தி ஆயிவிட்டது உ

ஐநூற்றுவன் குளம் - கண்டுபிடிப்பு

சென்னை பல்லாவரம் அருகிலுள்ள பொழிச்சலூரில் 'ஐந்நூற்றுவன் குளம்' என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்றினைத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இளநிலைக் கல்வெட்டாய்வாளர் திரு. மே. சீனிவாசன் கண்டறிந்து கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராசகோபால் அவர்கள் படித்துவந்துள்ளார். ஐந்நூற்றுவன் குளம் என்று கல்வெட்டு பொறிக்கப்பட்டும், குத்துவிளக்குகள், கலப்பை, குறுவாள் மற்றும் உடுக்கை போன்ற அமைப்பிலான பணப்பை ஆகியனவும் பொறிக்கப்பட்டுள்ளன. இககல்வெட்டு கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் காணப்படுகின்றது.

6 வெள்ளைத் துர்க்கை

ச. பரணன்
காப்பாட்சியர், தஞ்சாவூர்

இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயிலின் கருவறையினை ஒட்டியுள்ள முதற்சுற்றில் விஸ்வநாதர் ஆலயத்தின் இடது புறத் தூண் ஒன்றில் வெள்ளைப்பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்ட கலை நுட்பம் செறிந்த துர்க்கை கற்சிலை உள்ளது. இது சுமார் 2 அடி உயரமும் 1 அடி அகலமும் உடையதாக எட்டுக் கைகளுடன் ஆயுதங்கள் ஏந்தி முகத்தில் கோபம் கொந்தளிக்கக் காட்டப் பட்டுள்ளது. மார்புக்கச்சை இன்றியும் மேற்கையில் வாகு வளையமும், கைகளில் வளையல்கள் அணிந்தும், கழுத்தில் மணிமாலையும், இடுப்பில் இறுக்கிக் கட்டிய ஆடையின் முடிச்சும் மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளன. வலது காலினைச் சற்றே உயர்த்தி எருமையின் முதுகின் மேல் அழுத்திய நிலையிலும், கால்களில் தண்டை அணியப் பெற்றும், வலதுகை ஒன்றில் பிடித்த நீண்ட சூலாயுதத்தினை எருமையின் முதுகில் குத்தியபடியும் அதன் காரணமாக எருமை வேதனையுடன் வால் வளைத்து, முதுகினை நெளித்து வாய் பிளந்தும், கண்களில் மிரட்சியுடனும் காணப்படுகிறது. எருமையின் வால் பகுதியினைத் துர்க்கையின் வாகனமாகிய சிங்கம் தன் வாயினால் கவ்விய நிலையில் உயிர்த்துடிப்புடன் காண்போர் வியக்கும் வண்ணம் காட்டப்பட்டுள்ளது.

தளவாய் சேதுபதி காலத்தில் (கி.பி. 1674-1710) வழங்கப் பட்ட செப்பேடு ஒன்றில் இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் குருக்கள்மார்கள் நிறைந்த சபையாரால் எழுதிக்கொடுத்த இசைவுமுறியில் இச்சபையாரின் கடமைகளாகக் குறிப்பிடும்போது "சுவாமி பூசிக்கிற குருக்கள்மார் அவர்கள் செய்யும் தொழில் அனுமேதாசை பூசை பண்ணுகிறது ராமனாதசுவாமியை பூசை பண்ணிகிறது மலைவளர் காதலியம்மனை பூசை பண்ணுகிறது படிகலிங்கத்தை பூசை பண்ணுகிறது ஊற்சவவிக்கிரகம் ராமனாத

சுவாமியைப் பூசை பண்ணுகிறது தாண்டவேசுரரைப் பூசை பண்ணு கிறது தேவை அம்பலவாணனார் பூசை பண்ணுகிறது பல்லக்கு னாயகரைப் பூசை பண்ணுகிறது மெழுந்தருளப் பண்ணுகிறதும் **வெள்ளை துர்க்கையம்மனை** பூசை பண்ணுகிறதும் சுத்துகோவி பரிவாரதேவதையளுக்கு நெய்வேத்தியும் தீபராதனையும் பண்ணு கிறதும் திருவாபரணம் சாத்துகிறதும் யிந்த தொழில் காலா லுக்கு காலங்களிலே பண்ணிக் கொண்டு'' இவ்வாறு வெள்ளைத் துர்க்கை அம்மனுக்கும் மிகச் சிறப்பாக ஒவ்வொரு நாளும் பூசை செய்யப்பட்டுள்ள விவரம் குறிக்கப்பட்டுள்ளது.

மேலும், மலைவளர் காதலி அம்மன் பூசைக்குப் பூவும் புகையும் பிரசாதமும் படிகலிங்க பூசைக்கு பிரசாதமும் இரு நாழியும் வெள்ளைத் துர்க்கைக்கு நாழி படி பிரசாதமும் ஆக முன்நாழி பிரசாதமும் என்று செப்பேட்டில் வருவதன் மூலம் அம்மன்பூசைக்கு அடுத்து வெள்ளைத் துர்க்கைக்கும் சிறப்பாகப் பூசை செய்யப் பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. இச்செப்பேட்டில் வெள்ளைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள துர்க்கையினை வெள்ளைத் துர்க்கை யென்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இச்சிற்பம் மகிசா சுரனை வதம் செய்வது போன்று வடிக்கப்பட்டுள்ளதால் மகிசாசுர மர்த்தினி என்று கூறலாம்.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வெள்ளைத் துர்க்கை[3] அம்மன் சேதுபதிகள் காலத்தில் வட இந்திய மக்களால் வழங்கப்பெற்று இன்றளவும் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளபடி கோயிற் பூசைகள் சிறப்பாகவே செய்யப்பட்டு வருகின்றன. வட இந்திய மக்களுக்கும், தென் இந்திய மக்களுக்கும் இணைப்புப் பாலமாகவும் ஒற்றுமைச் சின்னமாகவும் இந்த வெள்ளைத் துர்க்கை அம்மன் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

7 கடம்பூர்

முத்து. எத்திராசன்
சென்னை-17

கடம்பூர் என்று அழைக்கப்படும் இவ்வூர் திண்டிவனத்திலிருந்து செஞ்சி செல்லும் சாலையில் சுமார் பதினெட்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. நெடுஞ்சாலையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றால் இவ்வூரை அடையலாம்.

முதலாம் இராசராச சோழனின் அண்ணனான ஆதித்த கரிகாலன் சம்புவராயர் மாளிகையில தங்கியிருந்தபோது பகைவர்களால் கொல்லப்பட்டான் அவ்விடம் இவ்வூர் தான் என்று ஒரு சில ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. அப்படிப்பட்ட சிறப்புடைய கடம்பூர் இன்று சிறிய ஊராக உள்ளது.

அவ்வூரில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் இடத்தில் ஒரு சிறிய பாறையில் கல்வெட்டொன்று காணப்படுகிறது. அக்கல்வெட்டின் இருபுறமும் சிதைந்திருப்பினும் மற்றையவை மிக அழகாகவும் தெளிவாகவும் காணப்படுகின்றன.

'கோப்பரகேசரி பன்மர்க்கு' எனத் தொடங்கும் இக்கல்வெட்டு சுமார் பன்னிரண்டு வரிகளை உள்ளடக்கியதாகும் 'கோப்பரகேசரி என்ற அடைமொழி முதலாம் பராந்தக சோழனுக்கு உரியது என்பதால் இக்கல்வெட்டின் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். இக்கல்வெட்டின் இடையிடையே எழுத்துக்கள் இன்மையால் இருக்கின்றபடி நாம் படித்தறிவது.

"கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 31 (34) கடம்பூர் ஊரோம் ......இவ்வூர் நல்லுழான் அரையன் மாதேவனிடை பொன்கொண்டு இவனிடைக் கொண்ட பொன்னுக்கு ஊரார் அட்டுக் கொடுத்த பரிசாவது... ஆட்டாண்டு தோறும்... அ0வோமானோம். இதற் றிறம்பிர் புகுவாரிது காத்தாரடி முடிமேலன". என்பதாகும்.

இங்குள்ள மக்கள் இக்கல்வெட்டைப் பற்றிய செய்தியை அறிந்த பிறகு இதை மிகவும் கண்ணுங்கருத்துமாகக் காத்து வருகின்றனர். இது குறித்து அவர்கள் கூறும் செய்தியும் பின வருமாறு.

கல்லுடைக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள ஒருவன் ஒரு சமயம் இக்கல்வெட்டு இருக்கும் பாறையை உடைக்க வந்தானாம். உடைப்பதற்குமுன் சாமி கும்பிட்டு கோழி காவு கொடுத்து உடைக்கப் போனானாம். அப்போது அங்குள்ள மக்கள் தடுக்கவே அவனால் ஒன்றும் செய்ய முடியாமற் போய் வீட்டிற்குச் சென்றானாம். அங்கு அவன் இரத்த வாந்தி எடுத்து இறந்துவிட்டானாம். அது முதற்கொண்டு அம்மக்கள் அதற்குத் தீங்கு செய்தால் தெய்வக் குத்தம் ஏற்படும் என்று கருதுகின்றனர். இதனால் அக்கல்வெட்டு யாராலும் பழுது ஏற்படாமல் பாதுகாப்பாகவே உள்ளது.

மேலும் இவ்வூரில் ஆவுடையார் கோயில் என்று கூறப்படும் இடத்தில் ஆவுடையுடன் கூடிய லிங்கமும், நந்தியும் மட்டும் உள்ளன. அவ்விடத்தில் சுதை வேலைப்பாடுடன் கூடிய இரு பொம்மைத்தலைகள் கிடைத்தன. ஒன்று ஆணின் தலை; மற்றொன்று பெண்ணின் தலை. பெண்ணின தலை மிகவும் அழகுடன் நேர்வகிடும் ஒருபுறம் கொண்டையுடன் காணப்பட்டது. நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டு இட்டது போன்ற அமைப்பும் காதில் காதுவளை (ஓலையால் ஆனதோடு)யும், கொப்பியும் கொண்டு விளங்கியது. மூக்கில் அணி ஏதுமின்றி மிக அழகிய உருவுடன் கூடிய அவ்வுருவை மட்டும் எடுத்து வந்து தொல் பொருள் இயக்குநர் அவர்களிடம் காட்ட அது சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பொம்மை என்றும் விசயநகர நாயக்கர் காலத்தவை என்றும் கூறினார். இன்னும் சரிவர இவ்வூரை நாம் கள ஆய்வுச்செய்வோமானால் மேலும் பல புதியத் தடையங்கள் கிடைக்கும். வரலாற்றுக்கான செய்தி கிடைக்கும்.

உப்பு வேலூர்
ஒரு வரலாற்றுப் பார்வை

8

மா. சந்திரமூர்த்தி
சிறப்பு நிலைப் பதிவு அலுவலர், சென்னை

உப்பு வேலூர்

சங்க இலக்கியங்களில் ஒன்றான சிறுபாணாற்றுப்படை, பத்துப் பாட்டு நூல்களுள் ஒன்று. இதில் நல்லூர் நத்தத்தனார் நல்லியக் கோடனுடைய தலைநகரமான கிடங்கில் என்னும் ஊருக்குச் சிறு பாணனை ஆற்றுப்படுத்துகிறார். சிறுபாணன் கிடங்கிலை நோக்கிச் சென்ற பெருவழியின் இடையிலே எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்னும் ஊர்கள் இருந்தன. இவை ஓய்மா நாட்டைச் சார்ந்தவை.

இடைக்கழி நாட்டு நல்லூரிலிருந்து புறப்பட்டுச் சென்ற சிறுபாணன், ஓய்மா நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய எயிற் பட்டினம் சென்றடைந்து பின் அங்கிருந்து புறப்பட்டுத் தென் மேற்கே நெடுந்தூரம் நடந்து வேலூரை அடைகிறான். இது முல்லை நிலத்தில் அமைந்த ஊர்.

> ''திறல்வேல் நுதியில் பூத்த கேணி
> விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்
> உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
> எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
> தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
> ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்''
>
> (சிறுபாண் : 172-179)

என்று நல்லூர் நத்தத்தனார் இந்த வேலூரைப் பாணனுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இந்த வேலூரை வடஆர்க்காடு மாவட்டத்தில் காட்பாடிக்கு அருகிலுள்ள வேலூர் என்று சோமசுந்தர தேசிகரும்,[1] தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் கிடங்கிலுக்கும் எயிற்பட்டினத்திற்கும் இடைவழியில் இருக்கிற வேலூரே என்று மயிலை சீனி வேங்கடசாமியும்[2] கருதுவர். மயிலை சீனி வேங்கட சாமியின் கருத்தே ஏற்புடையதாகக் கொள்ளலாம். இது ஓய்மா நாட்டு வேலூர் என்று குறிக்கப்படுகிறது. ஒரு கல்வெட்டில் 'ஓய்மா நாட்டு வேலூருடையான், என்று இவ்வேலூரின் தலைவன் குறிப்பிடப்படுகிறான்.

முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டில் இவ்வூர் 'ஓய்மா நாட்டு மணநாட்டு வேலூர்' என்றும் பிற்காலக் கல்வெட்டுகளில் வேமூர் என்றும் குறிக்கப்படுகிறது. இன்று இவ்வூர் உப்பு வேலூர் என்று அழைக்கப்படுகிறது. இது மரக்காணத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் உப்பங்கழிப் பகுதியில் உள்ளது.

கோயில்கள்

இவ்வூரில் திருமுகீஸ்வரர் கோயில், திருவரங்கப்பெருமாள் கோயில், முருகன் கோயில், பிள்ளையார் கோயில், பூமடையார் கோயில், பொறையாத்தாள் கோயில், கழனிவெளி அய்யனார் கோயில், கன்னியம்மன் கோயில், காளி கோயில், ஓம் சக்தி கோயில், மாரியம்மன் கோயில், திரௌபதி அம்மன் கோயில், ஆதிநாதர் கோயில் ஆகிய 13 கோயில்கள் பெரிதும் சிறிதுமாக அமைந்துள்ளன. இவற்றுள் தொன்மையும் புகழும் மிக்கவை மிகச் சிலவே. அவற்றில் சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் குறிப்பிடத்தக்கவை. இவை 800 ஆண்டுகட்கு முற்பட்ட பழமைமிக்கவை.

அக்கீஸ்வரர் கோயில்

சோழர் காலத்திய இக்கோயில் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. இக்கோயில் கல்வெட்டுகளில் அக்கீஸ்வர முடையார் கோயில் என்று குறிக்கப்படுகிறது. கோயிற் கருவறை கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நடராஜர் சபை, முகமண்டபம், ஆறுமுகன் சன்னதி, அம்மன் கோயில், பரிவார ஆலயங்கள், திருச்சுற்று மதில் ஆகிய

பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இவற்றுள் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவை சோழர் காலத்தியவை. தற்போதுள்ள முகப்பு மண்டபம் விஜயநகரர் காலத்தில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. சிவன் கோயிற் கருவறையிலுள்ள லிங்க வடிவம் திருமுகீஸ்வரர் என்ற பெயரில் வழிபாட்டிலுள்ளது. கல்வெட்டுகளில் திரு அக்கீஸ்வரர் என அழைக்கப்படுகிறார்.

கோயில் விமானம்

கருவறை மேலுள்ள விமானம் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. இது ஒரு தளத்தை உடைய கோயிலாகும். விமான தளத்தைச் சாலைகளும் கர்ண கூடங்களும் மாறிமாறி அமைந்து அலங்கரிக்கின்றன. இடையிடையே விமானம் தாங்கிச் சிற்பங்களும் பிற தெய்வ, மானிட உருவங்களும் அமைந்துள்ளன.

கிரீவ கோட்டத்தின் வடதிசையில் நான்முகனும், மேற் திசையில் திருமாலும், கீழ்த்திசையில் சிவனும் உமையும், காளை வாகனத்தின் மீது அமர்ந்து காட்சி கொடுக்கும் உருவங்களும் நல்ல சுதைச் சிற்பங்களாக அலங்கரிக்கின்றன.

கோயிற் சிகரம் சதுர வடிவுடைய நாகர சிகரமாக அமைந் துள்ளது.

திருப்பணி

கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் எழுப்பப் பட்ட இக்கோயில் கி.பி. 15-16ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதியை ஆண்ட விஜயநகர வேந்தர்களால் திருப்பணி செய்யப்பெற்று விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

விஜயநகரர் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ள முகப்பு மண்டபத்தை ஆறு அழகிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. இதன் சதுரப் படைகளில் குந்து சிம்மங்களும் தெய்வ வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் கீழ்த்திசையில் ஆறுமுகப் பெருமானுக்கென்று தனிச்சன்னதி உள்ளது. இங்கு செவ்வேள் ஆறுமுகமும், பன்னிரு கரங்களும் கொண்டு மயில் மீது தோன்றும் காட்சி கவினுற வடிவமைக்கப்பட்டுள்ளது. வள்ளி தெய்வயானை ஆகிய இரு தேவியரும் கரங்களில் தாமரை மலரும் அல்லி மலரும் ஏந்தி எழிலுருவாய்க் காட்சி அளிக்கின்றனர்.

பழைய சிற்பங்கள்

இம்முகப்பு மண்டபத்தில் இக்கோயிலுக்கு உரிய பல பழைய சிற்ப வடிவங்களைக் கண்டுகளிக்கலாம். அவற்றில், நான்கு கரங்களில் அங்குசம், பாசம், தந்தம், மோதகம் ஏந்தி இடம்புரியாக வீற்றிருக்கும் விநாயகர், மேற் கைகளில் தாமரை மலரைப் பற்றிக் கீழ்க் கைகளால் அபய-வரதமளிக்கும் அன்னை காமக்கோட்ட நாச்சியார், உடுக்கை, நாகம், திரிசூலம் கபாலம் ஆகிய கொடிய ஆயுதங்களை ஏந்தி ஆடையற்ற அழகராக உடலில் உடைமணி தரித்துத் தலையில் சுடர் முடி சூடி வடுக வாகனத்துடன் தோன்றும் பைரவர், மேற் கைகளில் சக்திப்படையும் வச்சிரப் படையும் கொண்டு கீழ்க் கைகளால் அபய வரதமளித்து அருள்பாலிக்கும் செவ்வேள், வலது கையில் மழுவேந்தி வீற்றிருக்கும் சண்டிகேசுவரர் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை.

இச்சிற்பத் தொகுப்பில் சூரியனும் செவ்வேளும், பைரவரும் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அழகிய சோழர் காலப் படைப்புகளாகக் கருதத் தக்கவை. ஏனைய விஜய நகரர் காலத்தவை.

அம்மன் ஆலயம்

காமக்கோட்டம் : இக்கோயிலுக்கு உரிய அம்மன் ஆலயம் திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது. தென் திசை நோக்கிய இவ்வாலயம் சதுரமான சிறிய கருவறையையும், ஏக தள விமானத்தையும், நாகர சிகரத்தையும் அர்த்த மண்டபத்தையும் உடையது.

சன்னதியின் நடுவே சதுர்புஜங்களுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கும் பெரிய நாயகியின் சிற்ப வடிவம் பேரழகு மிக்கது.

சோழர் காலத்திய இவ்வுருவம் தாமரைப் பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் நெடிய உருவில் காட்சியளிக்கிறது.

காமக்கோட்ட நாச்சியார்

பெரிய நாயகி : இத்தலத்துக் காமக்கோட்ட நாச்சியாரின் மேல் வலக்கை தாமரை மலரையும் இடக்கை நீலோற்பலத்தையும் பற்றி

உள்ளன. கீழிரு கைகள் அபய வரத முத்திரையில் அமைந்து அருள்பாலிக்கின்றன.

அம்மனின் தலையில் அழகிய கிரீட மகுடமும், காதில் மகரக் குழைகளும், கழுத்தில் கண்டசரமும், கல் பதித்த கழுத்தணி முதலிய அணிகளும், மேற் கைகளில் மலர் முகப்புடைய தோள் வளையும், முன் கைகளில் காப்பும் கைவளையும் சூடகமும், இடையை சுற்றிலும் அழகிய அரைமணியும் மேகலையும், இடையில் இருந்து முழங்காலுக்குக் கீழ்வரை கச்சையும், காலில் பாதசரமும் பாடகமும் அம்மனை முடிமுதல் அடிவரை அழகு செய்கின்றன. இச்சிலையின் குவிந்த தனங்களின் மேல் மார்புக் கச்சை காட்டப் படவில்லை.

இச்சிற்ப வடிவம் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது சோழர் காலத்திய சிற்பக்கலையின் அற்புதத்திறனை வெளிப் படுத்தும் உருவாகத் திகழ்கிறது. சோழர் காலத்து இக்கோயிலில் தற்போது எஞ்சி நிற்கும் எழில்மிகு சிற்பங்களில் இவ்வுருவம் குறிப்பிடத்தக்கது. இதனைப் பெரியநாயகி என்றும் பிரகன் நாயகி என்றும் தமிழிலும் வடமொழியிலும் அழைத்து வழிபடு கின்றனா.

செப்புத் திருமேனிகள்

இக்கோயிலில் தற்போது சந்திரசேகர மூர்த்தி மற்றும் சந்திரசேகர அம்மன் ஆகிய இரு உற்சவர் சிலைகள் மட்டுமே உள. நேராக நின்ற கோலத்தில் நான்கு கரங்களில் மழுவும் மானும் ஏந்தி அபய-வரதம் அளிக்கும் சந்திரசேகர மூர்த்தியின் செப்புப் படிமமும், அருகில் அல்லி மலரும், மற்றொரு கரத்தைத் தாழ்கரமாகவும் கொண்டு ஒயிலாக நிற்கும் சந்திரசேகர அம்மன் சிலையும் காணத்தக்கவை. இவ்விரு செப்புத் திருமேனிகளும் கி. பி. .5-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. விஜயநகரர் காலத்துக் கலைப்பாணியை வெளிப்படுத்துபவை.

இக்கோயிலுக்கு உரிய திருச்சுற்று மதில் ஆங்காங்கே சிதைந்தும் சரிந்தும் திருப்பணியை எதிர்நோக்கிக் காணப்படுகிறது.

திருவரங்கப் பெருமாள் கோயில்

இது ஊருக்கு மேற்கே அமைந்துள்ளது. 'ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஒய்மா நாட்டு வேலூரான விருதராஜ பயங்கர நல்லூர் பெருமாள் குலோத்துங்க சோழ விண்ணகராழ்வார் என்றும் இராஜநாராயண விண்ணகர் ஆழ்வார் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. சோழர் காலத்து இக்கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், முகமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டு எழில்மிகு விண்ணகராகத் திகழ்கிறது.

சதுர வடிவுடைய உண்ணாழியில் ஸ்ரீதேவி, பூதேவியருடன் விஷ்ணு நின்ற கோலத்தில் காணப்படுகின்றார். இவ்விண்ணகரத்திற்கு உரிய பூமகளின் பழைய சிலை மட்டும் இவ்வூர்ச் சிவாலயத்தின் முன்புறம் காணப்படுகிறது. இக்கோயிலும் சிலைகளும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

இக்கோயிற் கருவறைப் புறச்சுவரின் அதிட்டானத்தில் கல்வெட்டுகள் ஏதும் இல்லை, பிற அர்த்த மண்டப - முகமண்டப அதிட்டானங்களில் சோழர் காலக் கல்வெட்டுகள் உள.

இவ்வூரில் உள்ள சமணக் கோயிலான ஆதீசுவர சுவாமி கோயிலும் பழமையானது. இங்கு விருஷபநாதத் தீர்த்தங்கரர் முதல் 24 தீர்த்தங்கரர் சிலைகளும் வழிபாட்டில் உள்ளன.

---

1. Identification of Sopatana by S. S. Desikar. pp. 129-140, Quarterly Journal of the Mythic Society, Vol. XXI.
2. சிறுபாணன் சென்ற பெருவழி–மயிலை சீனி வேங்கடசாமி, பக். 1-8
   Tamil Culture, Vol. IX, No. 1, January 1961.
3. S.I.I. Vol. XIII. No. 25.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநர் திரு. கு. தாமோதரன் அவர்கள் சார்பாக
திரு. மா. சந்திரமூர்த்தி, பதிவு அலுவலரால்
வெளியிடப் பெற்றது.